*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – VI Issue - 1
December -2021

# விவேகசிந்தாமணி காட்டும் வாழ்வியல் விழுமியங்கள்

விந்தியகௌரி, பொ.
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding author: vinthiyagowri@vvvcollege.org**

**ஆய்வுச்சாரம்**

விவேகசிந்தாமணியில் அன்பு, அறிவால் மனித வாழ்வு மேன்மையடையுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அறவாழ்விற்குப் பொருட்செல்வம் அவசியம். மனிதன் மானத்தோடும் தன்மானத்தோடும் வாழவேண்டும். மாதா, பிதா, குருவை வணங்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**கருச்சொற்கள்: அன்பு, அறிவு, உழவுத்தொழில், பொருட்செல்வம், விருந்தோம்பல் பண்பு, உண்மை, மானம்,**

**முன்னுரை**

மக்கட்கும் உயிர்கட்கும், தன் நினைவால், சொல்லால், செயலால் தீங்கின்றி நடத்தலே ஒழுக்கம். சமுதாயத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் பொங்கித் ததும்ப வேண்டுமெனில்,ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று சில கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்துக் கொள்ள வேண்டும். கடமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் தொகுப்புகளே விழுமியங்கள். கற்பவர் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் விவேக சிந்தாமணியில் பல வாழ்வியல் விழுமியங்கள் விரவிக் கிடக்கின்றன.

**வாழ்வியல் விழுமியங்கள்**

வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் இயலே வாழ்வியலாகும். படைப்பாளர்களின் முக்கிய நோக்கம் படைப்பு வழியாக மனித வாழ்வியலை

வடித்தெடுப்பதே ஆகும். விழுமியம் என்பதற்கு மதிப்பு, சிறப்பு, உயர்வு போன்ற பொருள்களையே அகராதிகள் தருகின்றன. சமுதாய மாற்றத்தினால் விழுமியங்களும் மாற்றம் பெறுகின்றன. ஒரு பொருளின் மீதான மதிப்பினையும் சிறப்பினையும் காலத்தின் அடிப்படையில் நோக்குவதையே விழுமியங்கள் எனலாம்.

**அன்புடைமை**

அன்பு என்ற மூன்று எழுத்துக்கு உள்ள ஆற்றலே தனி. கற்றார்க்கும் கல்லாதவர்க்கும் ஒருங்கே வசப்படுவது அன்பு. கனிந்த அன்பே தமிழரின் உயிர் நிலை.

ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியர் சிறப்பாகப் போற்றிய நெறி அன்பு நெறியே. **"அன்பொடு புணர்ந்த ஐந்திணை"**[1] என்கிறது தொல்காப்பியம்.

**மங்குல் ஐம்பதி னாயிரம் யோசனை**
**மயில்கண்டு நடமாடும்**
**தங்கும் ஆதவன் நூறாயிரம் யோசனை**
**தாமரை முகம்விள்ளும்**
**திங்கள் ஆதவற்(கு) இரட்டியோ சனையுறச்**
**சிறந்திடும் அரக்காம்பல்**
**எங்கண் ஆயினும் அன்பராயி ருப்பவர்**
**இதயம்விட் டகலாரே.**

விவேகசிந்தாமணி – 1:57

ஐம்பதினாயிரம் யோசனைத் தூரத்திலுள்ள மேகங்களைப் பார்த்து மயில்கள் நாட்டியமாடும். நூறாயிரம் யோசனைத் தூரத்தில் தங்கியிருக்கின்ற சூரியனைப் பார்த்துத் தாமரைப் பூக்கட்டவிழும். சூரியனுக்கு இரட்டிப்பான தொலைவில் சந்திரன் தவழ்ந்திருக்க, அதனைப் பார்த்துச் சிவந்த ஆம்பல் மலர்கள் மலர்ந்திடும். எந்தத் தொலை விடமாயிருப்பினும் அன்புடையவர்ளாயிருப்பவர்கள் ஒருவர்க் கொருவர் உள்ளத்தை விட்டுப் பிரியமாட்டார்கள் என்று தமிழரின் உன்னத அன்பைப் பகர்கின்றது.

**அறிவுடைமை**

அறிவு மனிதனின் மாபெரும் ஆற்றல். கல்வியறிவு மிகுந்த அறிஞர்கள் பின்பற்றுவது அறிவு நெறியே.

**"வெள்ளத்தால் அழியாது**
**வெந்தழலால் வேகாது**
**வேந்தராலும்**
**கொள்ளத்தான் இயலாது**
**கொடுத்தாலும் குறையாது**
**கொடிய தீய**
**கள்ளத்தார் எவராலும்**
**களவாட முடியாது**
**கல்வி என்னும்**
**உள்ளத்தே பொருள் இருக்க**
**உலகெங்கும் பொருள்தேடி**
**உழல்வ(து)என்னே?"**

விவேகசிந்தாமாணி–2: 69

நிலையற்ற பொருட் செல்வத்தை விட அழியாத அறிவுச் செல்வமே உயர்ந்தது. மனிதர்களின் புகழான வாழ்விற்குக் கல்வியே உசாத்துணை.

அறிஞர்களுக்கு மன்னவர்களும் எப்பொழுதும் மரியாதை செய்து வாழ்வர். நிறைகுணத்தோடு புவியில் வாழும் மேலோர் அறிஞரை நேயமாய் வணங்குவர். அறிஞர்களுக்கு ஏதேனுமொரு கீழ்மை உண்டானாலும் உலகத்திலுள்ளோர் அறிஞர்களை 'ஏதுமற்றவர்கள்' என்று கூறி இகழ்ந்துரைக்க மாட்டார்கள் என்று அறிஞர் பெருமையை அறிவுறுத்துகின்றது.

ஒரு சிங்கத்தைத் துள்ளி வரும் முயலொன்று அழைத்துச் சென்று, அங்குக் காட்டிலிருந்த ஆழ்கிணறொன்றின் நீரில் அச்சிங்கத்தின் நிழலைக் காட்டி, உள்ளே இன்னொரு சிங்கம் இருப்பதாக அச்சிங்கத்தை எண்ணச் செய்து, அதனை அக்கிணற்றுக்குள் பாயுமாறு

தூண்டிக்கொன்றதாகிய உவமைக் கதையில் வருவதுபோல, அறிவாளியே பலமுடையவனாவான். பலமுடையவன் அறிவிலியாயிருந்தால் அவனது பலத்தால் அவன் எத்தனை பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்த போதிலும் இன்னல் நிச்சயம் வரும்.

### உழவுத் தொழிலின் மேன்மை

உலகில் உள்ள உயிரினங்களுள் மனிதப்பிறப்பு மகத்துவமானது. "அரிதரிது மானிடராதலரிது"[2]என்கிறார் ஔவையார். வாழ்க்கை என்பது பிறப்பு முதல் இறப்பு வரையிலான காலகட்டமாகும். மனிதன் வயிறார உண்டு வளத்தோடு வாழ்ந்தாலன்றி எதுவும் செம்மையாக நடைபெறாது என்பதை உணர்ந்தே நம் முன்னோர்கள் உழவுத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். எல்லாத் தொழிலையும் உழவுத்தொழில் இயங்க வைக்கிறது என்பதை உலகறியும். திருவள்ளுவர்,

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்."[3]-**

**திருக்குறள் - 1033**

என்று உழவுத் தொழிலைச் சிறப்பித்துள்ளார்.

உழவர் உழுது நடத்துகின்ற உழவுத் தொழிலினால் அலகில்லா மறை மேன்மை பெறும். அந்தணர் நடத்தும் யாகங்கள் உயர்வாகும், பல கலைகள் உன்னதமடையும். பாவலர்தம் பா ஏற்றம் பெறும். மலர்குலாம் திருவிளங்கும். மழை உரிய காலத்தில் பெய்யும். மனிதகுலம் தழைக்கும். பூமி முழுவதும் பிரகாசமடையும் என்று உழவுத்தொழிலின் உன்னதம், உழவுத் தொழிலால் விளையும் நன்மைகள் என விவேகசிந்தாமணி எடுத்துரைக்கிறது.

### பொருட்செல்வம்

நல்லறத்தையும் இன்ப நலத்தையும் ஞானத்தையும் அநேகம் பேருடைய நெருங்கிய தொடர்பையும், எதிர்ப்புகளை இல்லாமல் செய்கின்ற ஆற்றலையும், பாராட்டிக் கூறப்படும் புகழையும் தன்னிடம் பொருந்திய பொருட்செல்வத்தால் அல்லாமல் வேறு உபாயத்தால் அடைவது சாத்தியமில்லை.

பொருட்செல்வமில்லாதவர்களுக்கு மகிழ்ச்சியில்லை: புண்ணியமுமில்லை. பொருந்திய புகழும் இல்லை. புதல்வர்களால் வரக்கூடிய பெருமை கிட்டுவதில்லை. சிந்தித்த காரியம் நிறைவேறுவதில்லை. உய்வு பெறுவதற்கு மார்க்கமும் இல்லை. பெரிய இவ்வுலகில் போக்கு வரவைக் கொண்ட பிணத்தைப் போல அலைவார்கள் என்று செல்வமற்றோர் நிலை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பூரணமான செல்வம் கொண்ட செல்வந்தர்கள் பழியானவற்றைப் பேசினாலும் அவற்றை முறைமை பொருந்திய அறநெறிச் சொற்கள் என்று சொல்லிப் புகழுவர். ஆனால், வறுமை மிக்குடையவர் பேசுகின்ற வாய்ச்சொற்களானவை அறமொழி ஆகினும் அதனை எள்குவர் என்பதிலிருந்து செல்வர்க்குரிய சிறப்பினை உணர முடிகின்றது. செல்வம் வந்தால் சிந்தை திரியும் என்பதை விளக்கும் சிறந்த பாடல் இதோ:

**"செல்வம்வந் துற்ற போது**
**தெய்வமும் சிறிது பேணார்**
**சொல்வதை அறிந்து சொல்லார்**
**சுற்றமும் துணையும் பேணார்**
**வெல்வதே கரும மல்லாமல்**
**வெம்பகை வலியென் றெண்ணார்**
**வல்வினை விளைவும் பாரார்**
**மண்ணின்மேல் வாழும் மாந்தர்."**

**விவேகசிந்தாமணி –1:51**

எப்படிப்பட்ட ஒழுக்கசீலர்களின் மனத்தைக் கெடச் செய்வதும், பெற்றோர்க்கே குற்றம் செய்யுமாறு ஆக்குவதும், நங்கையர்களுடைய தடுமாற்றமற்ற பதிவிரதா தர்மத்தைக் குலையச் செய்வதும், கற்கின்ற கல்வி, வித்தைகள் ஆகிய அனைத்தும் கேடடையும்படி கெடுதிபுரிவதும் பணத்தாசையால் வரும் பாதகங்கள் ஆகும்.

ஏரியில் ஒருமடையைத் திறந்து விட்டுவிட்டால், மிகுதியான வெள்ளநீர் ஒரு போக்காய்ப் போய்க்கொண்டிருக்க, ஏரியும் நிரம்பும், அப்படி ஒருமடையை திறக்காவிட்டால் வெள்ளமானது ஏரிக்கரையின் மத்திய பாகத்தை உடைத்துவிடும். அவ்வாறே பொருட்செல்வம் சேரும் வேளையில், தன்னைச் சார்ந்த பலருக்கும் ஒருவன் உதவுவானேயானால் அச்செல்வமானது படிப்படியாக விருத்தியாகும். அந்தவிதம் உதவாவிட்டால், அழிவுற்று அச்செல்வம் அவரைவிட்டு நீங்கும்.

**வறுமை**

தாங்க முடியாத வறுமை வந்து சேர்ந்ததென்றால் வறியவர் பொதுவிடங்களுக்குப் போவதற்கு நாணுவர். புலிபோல் தனக்கிருந்த வீரத்தில் குறைந்து போவர். விருந்தினரைப் பார்ப்பதற்கு வெட்கப்படுவர். மலர்க் கொடி போன்ற மனைவிக்கு அஞ்சி நடப்பர். அற்பர்களோடு ஒத்திசைந்து ஒழுகச் செய்யும். மிகுதியான புத்திசாலித்தனமும் குறைந்து போக, உலகத்தினரெல்லாம் அவமானப்படுத்துவர் என்று வறுமையால் ஏற்படும் கொடுமைகள் உணர்த்தப்படுகின்றன.

தரித்திரம் ஒருவருடைய அழகை மங்கச் செய்து மேனியை வதங்கிப் போகுமாறு வருத்தும். எல்லைக்குட்படாத பெரும் சோம்பலை ஏற்படுத்தும். கூற இயலாத கஞ்சத்தனத்தை அதிகரிக்கும். தலைவன் தலைவியருக்கிடையே விலக்க முடியாத சண்டை சச்சரவுகளை உருவாக்கும். பொய், பேராசை, அவமானம் தரும் தரித்திரத்தைக் காட்டிலும் மிக்க கொடுமையானது வேறு இல்லை.

தரித்திரம் பல்வேறு வகைப்பட்ட கவலைகளும் உருவாவதற்கு உகந்த பெரிய நிலைக்களம் என்று உரைப்பர். **"தரித்திரம் நன்மைசால் ஒழுங்கென்னும் தழைவனம் தனக்கு அழல்"** எனலாம். தரித்திரம் கொடிய எவற்றினும் கொடிது. அத்தகைய தரித்திரத்தை இல்லாமல் செய்வதே நல்ல காரியமாகும்.

தரித்திரமாகிய கொடும்பிணி வந்து பொருந்துமாகில் சிந்தை சிதைந்து சாப்பாட்டிற்குக் கூட வழியில்லாமல் ஆவி குமைந்து துன்புறுவர். பிணிக்கு மருந்தும் இருக்கிறதா என்று கேட்பின், இந்தப் பெரிய பூமியில் பிறிதொன்று இல்லை. பொருத்தமுள்ள சிறப்பான செல்வம் என்னும் மருந்தால்தான் தீருமென்று

தரித்திரப் பிணிக்கான தீர்வைக் கூறுகின்றது.

**விருந்தோம்பல்**

தம் மக்களிடத்தில் வைத்த அன்பு போலவே பலரிடத்தும் அன்பு வைத்து ஓம்பல் விருந்தோம்பல். விருந்தோம்பலில் தமிழரே சிறப்புப் பெற்றவர்கள். பழந்தமிழர் விருந்தோம்பலை வாழ்க்கையின் உயிர் நாடியாகக் கொண்டனர்.

விருந்தோம்பல் பண்பாடு பற்றித் தொல்காப்பியர் காலத்திலேயே போற்றப்பட்டது.

'விருந்து' என்பதற்குத் தொல்காப்பியம்,

**"விருந்தே தானும்**
**புதுவது புணைந்த யாப்பின் மேற்றே."[4]–**
**தொல்.பொருள் - 1495**

என்கின்றது.

தொல்காப்பியர்,

**"புகாஅக்காலைப் புக்கெதிர்ப்பட்டுழிப்**
**பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்."[5] -**
**தொல். கள-16**

என்று குறிப்பிடுகின்றார். மனிதன் பொருள் தேடி வாழ்க்கை வாழ்வது விருந்தினரைப் போற்றி உதவி செய்யுதல் வேண்டும். இதனைத் தொல்காப்பியர்,

**"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிலையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்."[6]**
**தொல். கற்பியல் - 1098**

என்கிறார் இல்லறத்திற்குரிய சிறந்த கடமைகளாகவும், பண்புகளாகவும் போற்றப்படுவது விருந்தோம்பலாகும்.

**"வேளாளன் என்பான் விருந்திருக்க**
**உண்ணாதான்."[7]**

என்கிறது திரிகடுகம்.

அபிதான சிந்தாமணி விருந்து என்பதற்கு புதிதாக வீட்டிற்கு வரும் நண்பர் என்று விளக்கம் அளிக்கின்றது.

வீட்டில் உள்ளவர்கள் விருந்தினரைக் கண்டவுடன் மன மகிழ்வோடு வரவேற்று மரியாதைகளைச் செய்து உண்மையே பேசி, உப்பில்லாத கஞ்சியை வார்த்தால் கூட அதைக் குடித்தால் அதுதான் அமிர்தத்துக்குச் சமமானதாகும். விருந்தினரைச் சரிவர உபசரிக்காமல் அன்பின்றி முகத்தைச் சுளித்துக் கொண்டே மூவகைப் பழங்களோடு பாற்சோற்றை அளித்த போதிலும் அவை திருப்தியை அளிப்பதில்லை அவற்றால் ஏற்கனவே நிறைந்திருக்கும் பசியோடு மேலும் கடும்பசி ஏற்பட்டுவிடும் என்று விருந்தோம்பல் பண்பினைச் சுட்டிக்காட்டுகின்றன.

**விருந்தினரைப் போற்றல்**

சாவா மருந்தாகிய அமிழ்தமாக இருந்தாலும், அதனையும் வந்த விருந்தினருக்குக் கொடுத்தே விருந்துண்டனர் அன்றையத் தமிழ் மக்கள். அதே வேளையில் வறுமையில் இருந்தாலும் விருந்தோம்பலை விரும்பும் வகையில் எல்லாம் கடைப் பிடித்தும் வந்துள்ளனர். விருந்தினர் அகம் மகிழ உள்ளம் அறிந்து ஓம்புவதே விருந்தோம்பலின் முக்கியப் பண்பாகும்.

**"விருந்தின னாக ஒருவன்வந்(து) எதிரின்**
**வியத்தல்நல் மொழி இனி(து)உரைத்தல்**
**திருந்துற நோக்கல் வருகென உரைத்தல்**
**எழுதல்முன் மகிழ்வன செப்பல்**
**பொருந்துமற் றவன்தன் அருகுற இருத்தல்**
**போம்எனின் பின்செல்வ(து) ஆதல்**
**பரிந்துநல் முகமன் வழங்கல் இவ் வொன்பான்**
**ஒழுக்கமும் வழிபடும் பண்பே."**

விவேக சிந்தாமணி – 2:55

என்று விருந்தினரைப் போற்றும் முறையைச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

### கோபமே கொடும்பகை

வெகுளி எல்லா உயிர்களுக்கும் பாவத்தை ஏற்படுத்தும். சினம் நற்குணம், தவத்தின் பயன், விரத ஒழுக்கம் ஆகியவற்றையும் கெடுக்கும். ஆத்திரமே அறிவைச் சிதைக்கும். உக்கிரம் மிக்க சினத்தைவிடவும் கொடிய எதிரி வேறொன்றுமில்லை.

மூங்கிலில் உற்பத்தியான சப்திக்கின்ற அக்கினியானது மூங்கிலே வேரோடு அழியும்படி எரிக்கும் விதத்தைப் போல, சகிப்பதற்கு முடியாத கோபாக்கினியானது ஒருவனுக்குள்ளே உற்பத்தியாகி அவனோடு பொருந்திய சுற்றத்தையெல்லாம் அழித்து விடும். அத்தகைய கோபத்தின் உக்கிரத்தை உணர்ந்தவர்கள் சாத்விகத் தன்மையால் மனத்திற்குள் அடக்க முயன்றாலும் அடங்காது மிகுதியான கோபக்கினியை நிகர்த்த உட்பகை இவ்வுலகில் வேறு இல்லை.

**“கோபத்தால் கௌசிகன் தவத்தைக் கொட்டினான்**
**கோபத்தால் நகுடனும் கோலம் மாற்றினான்**
**கோபத்தால் இந்திரன் குலிசம் போக்கினான்**
**கோபத்தால் இறந்தவர் கோடி கோடியே.”**

விவேகசிந்தாமணி –2:54

என்று சினத்தால் சீரழிந்தோரைப் பட்டியலிடுகின்றது.

### காமத்தினால் அழிவு

கபடங்கள் புரிவதும், களவு செய்தலும், எழிலான உயிர்களை வதைப்பதும், தருமத்தைச் சிதைப்பதும், அதிகமாகப் பொய் சொல்லுவதும், செல்வத்தை இழத்தலும், பொருந்திய காமத்தின் அல்லாமல் பிறிதொன்றால் உண்டாவதில்லை.

விரோதத்தை ஏற்படுத்துவதும், பாவத்தைக் கொண்டு வருவதும், பரிகாசத்தினைத் தோற்றுவிப்பதும், குற்றங்களைக் கொடுப்பதும், தடுமாற்றமுள்ள உள்ளத்தை உண்டாக்குவதும், நீசத்தன்மையை ஆக்கலும் ஆகிய இக்காரியங்கள், தளர்ச்சியைத் தருவதாகிய காமத்தினால் அல்லாமல் வேறொன்றால் உருவாவதில்லை.

### உண்மையே உயர்வு

மனிதர்கள் உண்மை பேசினால் நன்மை மேலோங்கும். பூமியையே உரிமையாகக் கொள்பவர்களாவர், மனிதர்களுள் தேவராக மதிக்கப்படுவர். பொய் பேசினால் உணவு கிடைப்பதும் குறைந்து போகும். அறிஞர்கள் பொய்யர்களை இழிவானவர்களென்று எண்ணி ஒருபொருட்டாக மதிக்கமாட்டார்கள்.

தானழிந்தாலும், தகுதியுடைய சான்றோருக்கு அழிவைக் கருதக்கூடாது. உடம்பிலுள்ள தசை வற்றிப்போனாலும் உண்ணத் தகுதியில்லாதவரது கையிலிருந்து வந்ததை உண்ணக்கூடாது. ஆகாயத்தால் மூடப்பட்டுள்ள நிலவுலகம் முழுவதையும் அடைவதாக இருந்தாலும் இடையிலே பொய் கலந்திருக்கும் வார்த்தைகளைப் பேசக்கூடாது என்று வாழ்விற்குத் தேவையான நல்ல கருத்துக்களை நவில்கின்றது.

**மானமுடையோர்**

தன்னுடைய மானத்தையும் தன்குலத்தினுடைய மானத்தையும், தன்னை அடைக்கலமாக வந்து சேர்ந்தவர்களுடைய மானத்தையும் ‘இவையனைத்தும் என் மானமே! இவை சமமே!’ என்று ஒப்பாகக் கருதி, மற்றவர்களிடமும் இனிமையுடன் நல்ல மரியாதை செலுத்தி, அவர்களுக்கு எந்நாளும் நன்மை செய்பவனை, ‘நிலைபெற்ற மானமுடையவன்’ என்றும் ‘சார்ந்தோரைக் காக்கின்ற வள்ளல்’ என்றும் போற்றிக் கூறலாம்.தங்கள் சரீரத்திலுள்ள மயிரில் ஒன்று உதிர்ந்து விட்டாலும் உயிர் வாழாதனவான காட்டில் வசிக்கும் கவரிமான்களைப் போல் தன்மானமுள்ள மனிதர்கள் பெருமை பொருந்திய புகழையே தங்கள் அணிகலனாக அணிவர். தன்மானம் சிறிதளவுமில்லாதவர்களோ உணர்ச்சியற்றுப் பிணங்களுக்கு இணையாகி, இழிவான கழுதைகளுக்கு நிகராக வாழ்ந்திருப்பவர் என்று சொல்லலாம்.

**நட்பு**

புலியொன்றும் பசுவொன்றும் நட்புச் செய்திருக்க, நட்பைப் பிரிக்கக் கருதிய நரியொன்றின் வஞ்சக வார்த்தைகளைக் கேட்டு, புலியால் பசு மாண்டு போனதைச் சொல்லும் கதையில் வருவதைப்போல, அற்பனொருவனால் நட்பு முழுவதும் சீரழிந்துவிடும். கதையில் வரும் புலியைப்போல் புல்லர் யார் என்ன சொன்னாலும் அதனை உண்மையென்று நம்பிக்கேட்டுத் தங்கள் நட்பினைப் பழித்துரைத்துக் கைவிட்டுவிடுவர். ஆனால் நல்லவர்களோ அவ்வார்த்தைகளைத் தீர ஆராய்ந்து பாராமல் எதுவும் செய்யமாட்டார்கள்.

**பாசத்திற்குரியோரும் பகையாவார்**

அன்பில்லாதவளாக இருப்பாளேயானால் தாயும் பகையாவாள். தந்தையும் கடனை ஏற்படுத்தியிருந்தால் பகையாவான். நல்ல அறிவை இழந்துவிடுவாளாகில் மனைவியும் கொல்லுகின்ற பகையாவாள். பெருமை மிக்க நூல்களைக் கற்றறியாவிட்டால் புதல்வனும் பேயைப்போல் பகையாகக் கூடியவனாவான். பொருந்துகிற குரோதமானது இவ்விதமாய் ஒருவருக்கு உருவாகும் என்று தெளிந்த நூலறிவையுடையோர் கூறியுள்ளனர்.

**அழிபவை**

மூத்தவர்களின் துணை இல்லாதகன்னிப் பெண்ணின் வாழ்க்கை, போர்முனை கிடைக்கப்பெறாத மன்னவனின் வீரம், வேலியில்லாத விளைந்த நிலம், கரை இல்லாது அமைந்த ஏரி, கட்டுப்பாடு இல்லாதவன் கொண்டிருக்கும் கோல வாழ்வு, குரு இல்லாதவன் பெற்ற வித்தை ஆகிய இவையனைத்தும் கடையாணி இல்லாத வண்டியைப் போல நிலைகுலைந்து விடும் என்று கூறலாம்.

**மானிடர் இன்பம்**

கவ்விக் கொண்டு ஆகாயத்தில் பறப்பதான கருடனின் வாயில் வளைந்த வரிகளையுடைய பாம்பு அகப்பட்டிருக்கிறது. கொல்லப்பட்ட அந்தப் பாம்பின் வாயினில் அச்சமுற்ற வலிய தேரை சிக்கியிருக்கிறது. சிக்கியிருக்கும் அந்தத் தேரையின்

வாயினில் வண்டு மாட்டிக் கொண்டிருக்கிறது. அந்த வண்டு தான் ஏற்கெனவே வாயில் உறிஞ்சி வைத்திருக்கும் தேனைச் சுவைப்பதால் பெறும் இன்பமே மானிடர் இவ்வாழ்வில் பெறுகின்ற இன்பமாகும்.

காட்டுவழியே பயணம் செய்து கொண்டிருந்த மனிதனை மதயானை ஒன்று விரட்டத் தொடங்க தடுமாறி வீழ்ந்து, உடைகின்ற நிலையிலிருந்த ஒரு பாழுங்கிணற்றில் படர்ந்திருந்த அறுகம்புல்லின் வேரைப் பற்றிக்கொண்டு அந்தரத்தில் தொங்க, ஐந்து தலைநாகமொன்று பார்த்துப் படமெடுக்க, அப்போது எலியொன்று வந்து அந்த அறுகம்புல் வேரைத் துரிதமாகக் கொறிக்கத் தொடங்க, அப்படிப்பட்ட ஆபத்தான சூழலில் அகப்பட்டவனுக்குக் கிணற்றின் விளிம்பிலிருந்த தேன் கூட்டிலிருந்து தற்செயலாய்ச் சிந்திடும், சிறு துளித்தேனைச் சப்புக்கொட்டிச் சுவைப்பதால் உண்டாகும் சுகத்தைப் போன்றதே, மானுடப் பிறப்பில் மனிதர்கள் நுகர்ந்திடும் சுகம்.

**ஆராதிக்கத்தக்கோர்**

தன்னை ஈன்றெடுத்தவளும், அண்ணனுடைய மனைவியும், ஆசாரியனுடைய துணைவியும், மன்னவன் சம்போகிக்கும் நாயகியும், தன் இல்லக்கிழத்தியைப் பிரசவித்தவளும் ஆகிய இப்பெண்களையே, பேசுகையில் அனைவருக்கும் நல்ல அன்னையர் என விவேகசிந்தாமணி சுட்டுகிறது. பிறப்பெடுக்க வைத்தவனும், கலையறிவை விருப்பத்தோடு போதித்த ஆசானும், சிறப்பாக ஞான போதனை செய்த சத்குருவும், அட்ட தரித்திர காலத்தில் உணவு கொடுத்து உதவி செய்தவனும், பயத்தை நீக்கியவனும் ஆகிய இவர்களைத் தகுதிகுறையாத பிதாக்கள் என்றே மதிக்க வேண்டும்.

கற்புடைய பெண் அமிழ்தம் போன்றவளாவாள். கல்வியைக் கற்று அகங்காரமில்லாதிருப்பவன் அமிழ்தம் போன்றவனாவான். நன்மையையுடைய தேசமானது அமிழ்தம் போன்றதாகும். மேகத்தை அளாவிடும் கொடியையுடைய நன்மையான மன்னவன் தேசத்துக்கு அமிழ்தம் போன்றவனாவான். சேவகன் பயனுடைய வேலை செய்வானாயின் அமிழ்தம் போன்றவனாவான் என்று ஆராதிக்கத்தக்கோரை நிரல்படுத்துகின்றது.

**உயிர்போனால் உடன்வருவன**

**பண்டம் பொய்க்கூரை பழகி விழுந்திடில்**
**உண்டஅப் பெண்டிரும் மக்களும்**
**பின்செலார்**
**கொண்ட விரதமும் ஞானமும் அல்லது**
**மண்டி அவருடன் வழிநட வாதே.**

**விவேகசிந்தாமணி– 2:100**

என்று வாழ்வில் நிலையானவை நிலையற்றவை எவையெவை என்பதைப் பதிவுசெய்துள்ளது.

**முடிவுரை**

மனிதன் சமுதாயத்திற்காகப் படைக்கப்பட்ட விவேகசிந்தாமணியைப் படிக்கும் போது சமூகச் சூழலைப்புரிந்து கொள்கிறான். அவற்றுள் கூறப்படும் அன்பு, அறிவு, உழவுத்தொழில், பொருட்செல்வம், விருந்தோம்பல் பண்பு, உண்மை, மானம்,

நட்பு போன்ற வாழ்வியல் விழுமியங்களால் மனத்தூய்மையும், அமைதியும் பெறுகிறான். பிற உயிர்கள் மேல் இரக்கம் காட்டும் நற்குணம் உண்டாகிறது. வாழ்க்கையில் உண்டாகும் இன்பத்தை அனுபவிப்பதற்கும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதற்கும் விவேகசிந்தாமணி கற்பிக்கின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியர், தொல்காப்பியம், நூற்பா- 1038
2. தொல்காப்பியர்,தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா – 1495
3. தொல்காப்பியர், தொல்காப்பியம், களவியல், நூற்பா -16
4. தொல்காப்பியர், தொல்காப்பியம், கற்பியல் - 1098
5. திருவள்ளுவர், திருக்குறள் - 1033
6. பிள்ளை, கா.சு தனிப்பாடல் திரட்டு, பாடல் எண்- 1:57
7. நல்லாதனார், திரிகடுகம், பாடல் எண் -12